பக்கங்கள் 8 விலே சதம் 15

# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

வரதர் வெளியீடு

அலுவலகம்: 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், இலங்கை

மலர் 1 | 3-12-61 | ஞாயிறு | இதழ் 25

## தமிழ்மக்கள் இதயத்தில் இடம்பெற்ற இரண்டு சிவசிதம்பரங்கள்!

தடுக்கப்பட்ட தமிழரசுக்கட்சியின் தலேவர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தபோது உடுப்பிட்டிப் பிரதிநிதி திரு. சிவசிதம்பரம் தமிழ் மக்களிடையே உலாவித் தமிழ் மக்களுக்குத் தென்பளித்து வந்தார். வவனியாப் பிரதிநிதி திரு. சிவசிதம்பரமோ த. க. தலேவர்களுடன் தடுப்புக்காவலே அனுபவித்து, த. க. தலேவர்களின் இன உணர்ச்சிக்குத் தமது உணர்ச்சியும் எவ்விதத்திலும் தாழ்ந்ததில்லே என்று நிரூபித்துத் தமிழ் மக்களின் இதயத்தில் இடம்பெற்றுவிட்டார். கடந்த பாராளுமன்றக் கூட்டத்தில், "எமது கோரிக்கைகளே வெறும் நாற்காலிகளும், வெறும் உள்ளங்களுமே எதிர்நோக்கி நிற்கின்றன" என்று ஆத்திரத்தோடு கூறி அவர் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் இது:

### பாய்கிறது,

# வவனியா சிங்கம்!

அவசரகாலச் சட்டம் என்ன காரணத்தினுல் பிரகடனம் செய்யப்பட்டது? அந்தச் சட்டம் ஏன் இன்னும் நீடிக்கப்பட்டு வருகிறது? சத்தியாக்கிரக இயக்கம் சாத்வீகமான முறையில்தான் நடைபெற்று வந்தது. தமிழ்ப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் ஒவ்வொருவரும் இந்த இயக்கத்தில் பங்குபற்றினர்.

இந்த நிலேயில் தங்கள் கருத்தையும் வெளியிட முன் வராமல் சிலர் ஒளிந்துகொண்டிருப்பது வெட்கப்படவேண்டிய விஷயம்தான். (அவசரகாலத்தை தொடர்ந்து அமுல் நடத்துவதாக அரசாங்கம் சொல்கிறது. ஆனுல் வகுப்புத் துவேஷத்தைத் தூண்டிய திரு. இராஜரத்தினுவின் சிறைத்தண்டனேயை அரசாங்கம் குறைத்திருக்கிறது. அதே அரசாங்கம் சாத்வீகப்போராட்டம் நடாத்திய தமிழ்ப்பிரதிநிதிகளே எவ்வித விசாரணேயுமின்றி ஆறுமாதகாலம் தடுப்புக்காவல் சிறையில் அடைத்து வைத்திருந்தது!

அந்தச் சந்தர்ப்பத்தில் இராணுவத்தினர் செவெலிமடைத் தொகுதி மக்களுக்கும் இருக்கின்றதா?

நான் இங்கு பேசிக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் ஒரே ஒரு அமைச்சர் தான் அமர்ந்திருக்கிருர். இதே போல் எங்கள் கோரிக்கைகளே வெறும் நாற்காலிகளும், வெறும் உள்ளங்களும் மாத்திரமே எதிர்நோக்கிக் காத்திருக்கின்றன. ஐந்து வருடங்களுக்கு முன்னர் எங்களேப் பார்த்துச் சிரித்த ராஜரத்தினுவை, இன்று எல்லா மக்களும் பார்த்துச் சிரிக்கின்றனர். இதே நிலேமை எதிர்காலத்தில் உங்களுக்கும் ஏற்படாத வண்ணம் பார்த்துக் கொள்ளுங்கள்!

### அரசாங்கத்தின் அட்டூழியத்தை எதிர்த்து சிவசிதம்பரம் எம். பி, கர்ச்சனே!

சரகாலச்சட்டத்தை நீக்க வேண்டுமென்றபிரேரணே விவாதத்தில் யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. துரையப்பா கலந்துகொள்ளாததையே இவ்விதம் குறிப்பிட்டாரெனத் தெரிகிறது.)

சத்தியாக்கிரகம் எந்தச் சிங்கள மக்களுக்கும் எதிராக நடத்தப்படவில்லே. சுதந்திரக்கட்சி பதவிக்கு வந்ததும், தனது வாக்குறுதியை மறந்துவிடவே, தங்கள் உரிமையைப் பெறும் நோக்கமாகவே தமிழர்கள் சத்தியாக்கிரக இயக்கத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்ப்பிரதிநிதிகளின் நடவடிக்கைகளினுலேயே ய்த அட்டூழியங்களுக்குக் கணக்கு வழக்கில்லே. வவனியாவில் ஒரு புகைப்படப்பிடிப்பாளரைத் தங்கள் 'ஜீப்'பினுள் ஏற்றி அவரது 'கேமரா'வைச் சுக்குநூருக உடைத்துத் தூள்தூளாக்கினர். இதே விதமாக இராணுவத்தினர் செய்த அடாத செயல்கள் இன்னும் எத்தனே எத்தனேயோ உண்டு! அவைகளே விசாரிக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்ததா?

சிங்கள மக்களின் உரிமைகள் கூடப் பறிக்கப்பட்டுள்ளது. தங்கள் பிரதிநிதிகளேத் தெரிவு செய்து அனுப்பும் உரிமை மூதூர் தொகுதி மக்களுக்கும்,

### ஊழல்களின் சுவர்க்கம்!




"சிறுபான்மை இனங்களே நசுக்கல். கடுமையான வரிகள், வேலேயில்லாத் திண்டாட்டம், பொருளாதார வீழ்ச்சி முதலியவற்ருல் ஊழல்களின் சுவர்க்கமாக இலங்கை விளங்குகிறது" என்று லண்டனிலிருந்து வெளியாகும் 'கார்டியன்' பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

# அரசிகள் பலரின் உயிரை வாங்கிய துரதிர்ஷ்ட வைரம்!

மிகவும் துரதிருஷ்டம் வாய்ந்ததென்று கருதப்படும் நீலநிற வைரம், இப்பொழுது அமெரிக்க வர்த்தகப் பிரமுகரான ஹேரி வின்ஸ்டன் என்பவரிடம் இருக்கிறது. இதை இவர் 2,50,000 பவுண் விலைகொடுத்து வாங்கியிருக்கிறார். இந்த வைரத்தை இவர் வாங்கியதால் அவர் ஒரு கவலையும் அடைந்ததாகத் தெரியவில்லை. ஆனால், இந்த வைரம் இவர் கைக்கு வரும் முன்னர், பலருடைய கைகளுக்கு மாறி, ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு தீங்கை உண்டாக்கியே வந்ததாம்!

பிரபல அமெரிக்க பத்திரிகாசிரியர் ஒருவர் இவ்வைரத்தை 75,000 பவுன்களுக்கு வாங்கி எட்டு வருடங்கள் கழித்து அவரது பதினொரு வயது மகன் மோட்டார் விபத்தொன்றில் அகப்பட்டு உயிரிழந்தான். அதன் பிறகு இவரது வியாபாரத்தில் ஒரு பெரிய நஷ்டம் ஏற்பட்டது. கடைசியில் அவரும், அவருடைய மனைவியும் சித்த சுவாதீனமற்ற நிலையில் மாண்டனர்.

இந்த வைரத்தின் பூர்வ கதை மிகவும் விசித்திரமானதாக இருக்கிறது. ஒரு புத்த விக்கிரகத்தின் இரு கண்களில் ஒன்றில் இந்த வைரம் பதிக்கப்பட்டிருந்ததாகவும், ஒரு பிரெஞ்சுக்காரர் அதைப் பெயர்த்து எடுத்துக்கொண்டு பாரிஸுக்குப் போய்விட்டதாகவும் கூறப்படுகிறது. தேவாலயங்களிலுள்ள விக்கிரகங்களை அலங்கரிப்பதற்கென உபயோகிக்கப்பட்ட ஆபரணங்களிலுள்ள கற்களையும் வைரங்களையும் மனிதர்கள் அணிந்துகொள்வது கூடாது என்ற நம்பிக்கை கீழ் நாடுகளில் இருந்துவருகிறது.

இந்த வைரத்தை பிரான்ஸ் தேசத்தின் மன்னரான பதினான்காவது லூயி வாங்கினார். மேடம் டீமர்ன் டெஸ்பான் என்ற தன் ஆசை நாயகிக்கு லூயி இந்த வைரத்தைப் பரிசாகக் கொடுத்தார். இதை அவள் அணிந்தகாலம் முதற்கொண்டு அரசனின் அன்பை அவள் இழந்துவிட்டாள்!

மேரி அன்டாபனெட் என்ற அரசி (16வது லூயி அரசனின் மனைவி) இதை அணிந்திருந்தாள். அவள் கொலைக்களத்தில் சிரச்சேதம் (கில்லட்டீன்) செய்யப்பட்டு மாண்டாள். இந்த வைரம் ஆம்ஸ்டர்டாம் வைரத் தொழிலாளியான பால்ஸ் என்பவனின் கைக்கும் வந்து சேர்ந்தது. அது அவனுக்கு எப்படிக் கிடைத்ததென்று தெரியவில்லை. இந்த வைரம் அவன் கைக்கு வந்தபின்னர் அவனிடமிருந்த சொத்தெல்லாம் சூறையாடப்பட்டுவிட்டன. அதற்குப் பின் பல கைகள் மாறி, பின்னர், ஹென்றி தாமஸ் ஹோப் என்ற ஆங்கிலேயனின் வசம் இந்த வைரம் வந்து சிக்கியது. இதை அவன் எழுபது வருடங்கள் தன் வசம் வைத்திருந்துவிட்டுப் பின் விற்றான்.

அவனிடமிருந்த அந்த வைரத்தை விலைக்கு வாங்கிய நியூயார்க் நகை வியாபாரி ஒருவர் தம் சொத்தையெல்லாம் இழக்கநேரிட்டது! தனிடோ வங்கி என்ற ரஷ்ய இளவரசரிடமும் இந்த வைரம் சென்றது. இந்த இளவரசர் கத்தியால் குத்திக் கொலைசெய்யப்பட்டு மாண்டார்! துருக்கி சுல்தான் அப்துல் ஹமீது இதை வாங்கினார். இதை அணிந்து தன்னை அலங்கரித்து மகிழ்ந்த அவரது மனைவி சுல்தானின், கையாலேயே குத்தப்பட்டுச் செத்தாள்! அதற்குப் பிறகுதான் இந்தத் துரதிருஷ்டம் பிடித்த வைரம் அமெரிக்கா போய்ச் சேர்ந்ததாம்! ●



அப்துல்லா அன் கோ
அனுமதி பெற்ற
கண் பரிசோதகர்கள்
கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.
போன்: 486

# கண்டதும்... கேட்டதும்...

### வாய்ச்சொல்லை நம்பலாமா?

"ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம், இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம்" என்று ஒரு பழமொழி இருப்பது எல்லோருக்கும் தெரியும். 'என்ன காணும் மாயாவி! இருந்தாப்போல உமக்குப் பழமொழிப் பைத்தியம் பிடித்துவிட்டதோ?" என்று தானே கேட்கிறீர்கள்!

எனக்குப் பழமொழிப் பித்துமில்லை, மண்ணாங்கட்டியுமில்லை. தமிழருக்கு இன்று மேற்படி பழமொழி ரொம்ப ரொம்பப் பொருத்தமாயிருக்கின்றதென்பதைத்தான் சொல்ல வந்தேன்.

கடந்த வாரம் சனப்பிரதிநிதிகள் சபையில் தமிழர்களின் சங்கடமான நிலைமை பற்றி ஒழிவு மறைவின்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டது. எஸ். எல். எவ். பி. 'அப்படிக் கூறிற்று இப்படிச் சொல்லிற்று' என்றெல்லாம் தடைசெய்யப்பட்ட தமிழரசுக் கட்சி அங்கத்தவர்கள் அழாக்குறையாகச் சொன்னார்கள். எஸ். எல். எவ். பி. மெம்பர்கள் பேசாமல் கேட்டுக்கொண்டு இருந்துவிடவில்லை. சில சந்தர்ப்பங்களில் "நாங்கள் அப்படிச் சொல்லவில்லை." என்று மறுத்தார்கள்.

தகப்பன், மகளுடைய கலியாணத்தின் போது சீதன விஷயமாக அல்லது வரதட்சணை விஷயமாக கொடுக்கும் வாக்குறுதிகளே எழுத்தில் இல்லாது போனால் காற்றில் பறந்துவிடுகின்றன. இதற்காகத்தானே இந்தக்காலத்தில் எல்லா மாப்பிள்ளைகளும் அத்தகைய வாக்குறுதிகளை கல்யாணத்துக்கு முன்னரே எழுதி முத்திரை ஒட்டி வாங்கிக்கொள்ளுகிறார்கள்? இந்த லட்சணத்தில் தடைசெய்யப்பட்ட தமிழரசுக் கட்சி அங்கத்தவர்கள், பெரும்பாலானோர் சட்டம் படித்தவர்களாயிருந்தும், வெறும் வாய்ச்சொல்லில் நம்பிக்கை வைத்திருக்கலாமா?

### இதுதான் ஐயா அரசியல்!

தமிழர்கள் அந்தக் கட்சியை ஆதரித்திருந்தால் மொழியுரிமை கிடைத்திருக்கும், இந்தக் கட்சியோடு சேர்ந்திருந்தால் ஆளும் கட்சியை ஒரு ஆட்டு ஆட்டியிருக்கலாம், அப்படிச் செய்திருந்தால் இந்தநிலை ஏற்பட்டிருக்காது, இப்படிச் செய்திருந்தால் தமிழர் தலை நிமிர்ந்து நிற்கலாம் என்று பலரும் பலவிதமாக அன்றும் இன்றும் கூறுகிறார்கள்.

எதைச் செய்யவில்லையோ அதை ஏன் செய்யவில்லை என்று கேட்பதில் அர்த்தமில்லை. புத்தியுள்ள எவனும் அப்படிக் கேட்கமாட்டான். தடைசெய்யப்பட்ட தமிழரசுக் கட்சி எந்தக் கட்சியையும் பகைத்துக் கொள்ள முடியாமல் தனது கோரிக்கைகளுக்கு இணங்கும் கட்சிக்கு ஆதவளிக்கத் துணிந்ததில் தவறில்லை. இரண்டு கட்சிகளும் அந்தக் கோரிக்கைகளுக்கு இணங்க மறுத்த பின்னர் ஒரு கட்சிக்கு ஆதரவளித்ததன் மர்மம் என்ன என்று கேட்கின்றனர் ஒரு சிலர். அந்தக் கட்சிக்கு "மெஜாரிட்டி" நிச்சயம் என்று தெரிந்த பின்னர் அந்தக் கட்சிக்கு அடிவருடியதில் தப்பென்ன என்று கேட்கிறார்கள் வேறு சிலர். அதுதானே அரசியல் என்றேன் நான்.

### வாழ்க்கைச்செலவு இறங்குமா?

புளியமரத்து அணிலைப் போல உச்சாணிக் கொம்பை நோக்கித் தாவிக் கொண்டிருக்கும் வாழ்க்கைச் செலவைக் கீழே இறங்கச் செய்வதற்கு அரசாங்கமும், அமைச்சர்களும்,உற்பத்தியாளர்களும் உபயோகிப்பவர்களும் பகீரதப் பிரயத்தனங்கள் செய்கிறார்கள் அல்லது செய்துகொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். விவசாய அமைச்சர் சமீபத்தில் வெளிநாடு சென்றிருந்த சமயம் பதில் விவசாய அமைச்சர் பதவியை வகித்தவர் தமது அலுவலகத்தின் முன்றலிலிருந்த பூச்சட்டிகளைத் தூக்கி எறிந்துவிட்டு வெண்டையும் தக்காளியும் பப்பாளியும் பயிரிட்டாரென்பது தான் பிரசித்தமாயிற்றே! அந்தப் பயிர்கள் பலன் தருகின்றனவா என்று என்னிடம் கேட்காதீர்கள். ஆனால் உள்ளூர் உற்பத்தி அதிகரிக்கவில்லை என்பதும், வாழ்க்கைச் செலவு குறையவில்லை என்பதும் நிச்சயம்.

சில தினங்களுக்கு முன்னர் உணவு, வர்த்தக மந்திரி திரு. ரி. பி. இலங்கரத்னா ஒரு கூட்டத்தில் பேசியபோது கூட வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்காக மொத்த விற்பனவு ஸ்தாபனத்தை திறம்பட இயங்கச் செய்வதே இன்றைய அரசாங்கத்தின் இலட்சியமாக இருக்கின்றது என்று கூறினார். அப்படியிருந்தும் வாழ்க்கைச் செலவுமேல் காற்றிலேயே பறந்துகொண்டிருக்கிறதே தவிரக் குத்துக்கரணம் போட்டுக் கீழே இறங்கக் காணோம்.

தேடுவாரற்றுக் கிடந்த பழம்புளியின் இறக்குமதியைத் தடைசெய்து ஊரிலிருந்த புளிப் பானைகளையெல்லாம் காலியாக்கி, நாட்டில் புளிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்ட பின்னர் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிப்பதற்காகவே புளி இறக்குமதியைதடை செய்ததாயும், அதனால் எதிர்பார்த்த பலன்கிட்டவில்லையென்றும் சமாதானம் கூறினார்கள் அதிகாரிகள். அதன்பின்னர் 'புளி வருகிறது! புளி வருகிறது!!' என்றார்கள். புளி இறக்குமதியாகிக் கூட்டுறவுச் சங்கக்கடைகள்மூலம் குறைந்த விலைக்குவிற்பனை செய்தார்கள். பொதுஜனங்கள் புளிப் பஞ்சம் தீர்ந்தது குறித்து சந்தோஷப்படக்கூட அவகாசமளிக்காமல் இறக்குமதியான புளியெல்லாம் கள்ளச்சந்தைக்குள் புகுந்து கண்ணாமூச்சி விளையாடத் தொடங்கி விட்டது. அதிகாரிகளைக் கேட்டால் "அப்படியெல்லாம் புளி கள்ளச் சந்தைக்கு கம்பி நீட்டியிருக்க முடியாது. கூட்டுறவுச் சங்கங்கள் அவற்றின் "கோட்டா"வைப் பெற்றுக்கொள்ளாதபடியால்தான் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. எதற்கும் அந்தச் சரக்கு கள்ளச் சந்தைக்குள் கால் வைக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான்" என்று கூறுகிறார்கள். புளி கள்ளச் சந்தைக்குள் தலையைப்புதைத்துக் கொள்ளாதபடி கடவுள்தான்காப்பாற்றவேண்டும்.

### அச்சுப்பேயால் நேர்ந்த அனர்த்தம்

கடந்த வாரம் கலையரசு சொர்ணலிங்கம் எதையோ நாசுக்காக சொன்னார் என்று நான் எழுத, அச்சுப்பேய் நுழைந்து அதனை காசுக்காக என்று மாற்றிப்பிரசுரித்து என்னைச்சங்கடத்தில் மாட்டிவைத்துவிட்டது. இதனால் கலையரசு சொர்ணலிங்கமவர்கட்கு எத்தகைய மனக்கிலேசம் ஏற்பட்டிருக்குமென்பதை நான் அறிவேன். ஆகவே தவறு அச்சுப் பேயினுடையதாயினும், கலையரசு கேட்காமலே புதினத்தின் சார்பில் நான் அவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றேன்.

— "மாயாவி"

# திரை மறைவில்

## பிளவு இல்லையா?

மந்திரிசபையில் பிளவு இல்லையென்று எவ்வளவுதான் நிதியமைச்சர் சொன்னாலும் மந்திரிசபையிலுள்ளவர்கள் உட்பட எவருமே நம்பப்போவதில்லை. மந்திரிசபை இரு கோஷ்டிகளாக இயங்குகின்றது என்பதை மறுக்க முடியுமா? ரஷ்ய விஜயத்திற்குப் பின்பு சி. பி. டி சில்வா கோஷ்டியுடன் கைகோத்துக்கொண்டு திரிந்த வர்த்தக அமைச்சர் தும்பபனே ரி. பி இலங்கரத்தின இப்பொழுது "கொஞ்சம் சர்வாதிகாரம்" பீலிக்சுடன் சேர்ந்துவிட்டார் என்பது தவறா?

## மத்தியஸ்தர் பதியுதீன்!

மந்திரிசபையில் அடிக்கடி ஏற்படும் 'கோஷ்டிச்'சண்டைகளைத் தீர்த்து வைக்கும் பொறுப்பை கல்வியமைச்சர் பதியுதீன் மஹ்மூத் ஏற்றுக்கொண்டிருக்கின்றார். என்று சொல்வதில் தவறேதும் உண்டா? அண்மையில் கந்தளாய் சீனி ஆலைபற்றிக் கைத்தொழிலமைச்சருக்கும் வர்த்தக அமைச்சருக்குமிடையில் ஏற்பட்ட சச்சரவுகளை பதியுதீன் தான் தீர்த்து வைத்திருக்கிறார் என்பது உண்மையா அல்லவா?

## பதவி பறிபோகுமா?

கல்வியமைச்சர் பதியுதீன்மஹ்மூத் அவர்களைப் பதவியிலிருந்து நீக்குவதற்கான முயற்சிகளில் சில வட்டாரங்கள் ஈடுபட்டிருக்கின்றன என்று சொல்வதில் உண்மையுண்டா? சிங்கள பௌத்தர் ஒருவரே கல்வி அமைச்சராக இருக்கவேண்டும் என்ற புரட்சித் தாத்தா பிலிப்பின் கோஷத்தை அவர்கள் தங்களின் முயற்சிக்குக் காரணமாகக் காட்டுகின்றனர் என்பது கல்வி அமைச்சருக்குத் தெரியுமா? கல்வி அமைச்சர் பதவிக்கு உதவிக் கல்வி அமைச்சர் திரு. ஜே. சி. ரி. கருணாரத்தினவை நியமிக்கவேண்டுமென்று அவர்கள் சொல்லிக்கொள்வதும் கல்வியமைச்சருக்குத் தெரியுமா?

## பயப்படக் காரணமென்ன?

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைமைப் பீடம் இப்பொழுது கவலைப்பட ஆரம்பித்திருக்கிறது, எதைப்பற்றித் தெரியுமா? தமிழரசுக் கட்சியினர் மலைநாட்டுத் தமிழருடன் நேரடித் தொடர்பு வைத்துக்கொள்ள முயலுகிறார்கள் என்பதனால்தான்! தமிழரசுக் கட்சியினர் மலைநாட்டுத் தமிழ்மக்களுடன் நேரடித் தொடர்பு வைத்துக்கொள்வதைக்கண்டு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமைப் பீடம் பயப்படக் காரணமென்ன? தங்களின் தலைமைப் பதவிக்கு ஆபத்து ஏற்பட்டுவிடும் என்று பயப்படுகிறார்களா? அவர்களின் தலைமையில் மலைநாட்டுத் தமிழர்கள் ஏற்கெனவே அதிருப்தியடைந்திருப்பதை அவர்கள் அறியமாட்டார்களா? மலைநாட்டுத் தமிழர்களுடன் நேரடித் தொடர்பு வைத்துத் தங்களின் கொள்கைகளை அவர்கட்கு நேரடியாக விளக்குவதுதான் தமிழரசுக்கட்சி கடைப்பிடிக்கவேண்டிய சிறந்த கொள்கை என்பதில் சந்தேகமென்ன?

## அவர்கள் வராததேன்?

தமிழரசுக் கட்சியின் பிரேரணையில் கையெழுத்துப் போட்டவர்களில் கல்முனைப் பிரதிநிதி திரு ஏ. சி. அகமதுவும் ஒருவர் என்பது உங்களுக்குத் தெரியுமா? அவரும் பொத்துவில் மஜீதும் நிந்தாவூர் மஜீதும் விவாதத்தின்போது சபைப் பக்கமே எட்டிப் பார்க்கவில்லை என்பது உங்கட்குத் தெரியுமா?

## கைத்தொழில் அமைச்சைப் பிடுங்கமுயற்சி

மந்திரிசபையில் பிளவு இருக்கிறது என்று மேலேகுறிப்பிடப்பட்டுள்ளதல்லவா? அந்தப் பிளவு இப்பொழுது புது உருவமொன்றை எடுத்திருக்கிறது என்பது தெரியுமா? பலகாலமாக மந்திரிப்பதவியொன்றைக் கேட்டுக்கொண்டு திரியும் திரு. ஜோஜ் ராஜபக்சாவைக்கைத்தொழிலமைச்சராக்க பீலிக்ஸ் கோஷ்டியினர் முயலுகிறார்கள் என்பது தவறா? அவரைக் கைத்தொழிலமைச்சராக்குவதன்மூலம் மைத்திரிபால சேனநாயக்காவின் அதிகாரத்தைக் குறைக்கலாமென்று பீலிக்ஸ் கோஷ்டியினர் திட்டமிடுகின்றனர் என்பது உண்மையா? கைத்தொழிலமைச்சும் வர்த்தக அமைச்சும் ஒன்றாக்கப்படவேண்டுமென்றும், அவைகளைத்தன்னிடம் கொடுத்து மற்றைய அமைச்சுகளையெல்லாம் வேறு எவரிடமும் கொடுக்கலாமென்றும் கைத்தொழிலமைச்சர் கூறுவதாகச் சொல்லப்படுவது உண்மையா?

—"அம்பலத்துறைவோன்"

# வேலுப்பிள்ளை மாஸ்டரின் திருகு தாளங்கள்!

[அபாய அறிவிப்பு: 'வேலுப்பிள்ளை மாஸ்டர்' என்ற பெயரில் வேறு யாரோ ஒரு மாஸ்டர்தான் இதில் புனையப் பட்டிருப்பதால், உண்மையான 'வேலுப்பிள்ளை மாஸ்டர்கள்' தங்களைத்தான் இது குறிப்பிடுவதாகக் கருதிச் சினம் கொள்ள வேண்டாம்!]

'வேலுப்பிள்ளை மாஸ்டர்' என்றால் உங்களில் அநேகருக்கு அவரைத் தெரியும். தமிழாசிரிய வர்க்கத்தின் ஊழல்கள் இருக்கின்றனவே, அவைகளின் பிரதிநிதிதான் இவர்! புதினத்தின் வாயிலாக இவருடைய திருவிளையாடல்கள் சிலவற்றை உங்களுக்குத் தொடர்ந்து வெளிப்படுத்தலாமென்று தீர்மானித்திருக்கிறேன்.

முதலில் வேலுப்பிள்ளைமாஸ்டரின் உருவத்தைக் கொஞ்சம் தெரிந்துகொள்ளுங்கள். கன்ன உச்சிவிட்டு இழுத்தும் இழுக்காமலும் கிடக்கும் ஓரல் தலை. நெற்றியிலே சந்தனப் பொட்டு, குழி விழுந்த கண்கள். அவற்றிலே ஒரு அசட்டுப் பார்வை. பெரிய சளாப்பல் மூக்கு. தானே சுருட்டிய யாழ்ப்பாணம் திறம் சுருட்டைப் புகைத்துப் புகைத்துக் கறுத்த உதடுகள். காவியேறிய பற்கள், தோள் பட்டையில் பட்டன் பூட்டுகிற 'நாஷனல்' சட்டை. அதன்மேல் ஒரு தலைப்பு முன்னுக்கும், மறு தலைப்பு பின்னுக்கும் தொங்குகிற சால்வை, பீஸ் வேட்டி—இந்தத் தோற்றத்தோடு அடிக்கடி யாழ்ப்பாண டவுணிலும் ஆளைச் சந்தித்திருப்பீர்களே—ஓமோம், அவர்தான்! அவர்தான்!

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே உள்ள தமிழ்ப் பாடசாலை ஒன்றில் வேலுப்பிள்ளை மாஸ்டர் தலைமையாசிரியர்!—அதாவது தலைமையாசிரியருக்குரிய விசேட சம்பளம் இவருக்குத்தான் கிடைக்கிறது. ஆனால், இவர் போகிற பள்ளிக்கூடங்களிலெல்லாம் தலைமையாசிரியருக்குரிய வேலைகளையெல்லாம் இவருடைய 'அசிஸ்ரெண்ட்' தான் கவனிக்கவேண்டும். இன்னும் சரியாகச் சொன்னால் பாவம், இவருக்கு 'பேசிற்' நிரப்பக்கூடச் சரிவர விளங்காது! இவர் எப்படித் தலைமையாசிரியராக வந்தாரென்று நீங்கள் கேட்கலாம். 'அந்தக்காலத்திலே பள்ளிக்கூட மனேச்சரைக் கண்டால் தோளாலே சால்வையை எடுத்துக் கக்கத்தில் வைத்து, செருப்பைக் கழற்றி ஓரத்திலே வைத்து, எண்சாணுடம்பை ஒரு சாணாய்க் குறுக்கி ஒன்பது வருடங்களாய் கூழைக் கும்பிடு எல்லாம் போட்டுப் பார்த்ததும் இவருக்குத் தலைமையாசிரியர் பதவி வாய்க்கவில்லை. பிறகுதான் 'விஷயமறிந்த வட்டாரத்'திலிருந்து தலைமையாசிரியராவதற்குரிய குறுக்கு வழியைத் தெரிந்துகொண்டார்! அதன்படி இரண்டாயிரத்து ஐநூறு ரூபாவைக் கொடுக்க வேண்டிய முறைப்படி மனேச்சரிடம் கொடுக்க—

அடுத்த தவணைக் காலத்திலேயே வேலுப்பிள்ளைக்குத் தலைமையாசிரியப் பதவி கிடைத்து விட்டது!

வேலுப்பிள்ளை மாஸ்டருக்கு 'பேசிற்' நிரப்ப தெரியாதே தவிர, அந்தபதவிக்குரிய நெளிவு சுளிவுகள்எல்லாம்தெரியும். அதுவும் முதன்முதலில் அவருக்கு கடல்கடந்து ஏழு தீவுகளில் ஒரு தீவிலேதான் உத்தியோக உயர்வு கிடைத்தது. 'உள்ளூருக்குள்ளேயே கிடைக்காதா' என்று—தட்சணை செலுத்திய உசாரில்—மனேச்சரிடம்சிணுங்கிவிட்டுத்தான் வேறுவழியின்றி அவர் அந்தத் தீவுக்குப் போனார். போனவர் பிறகு அந்தத் தீவை விட்டுக் கழரவே மாட்டேனென்று எட்டு வருடங்கள் அங்கேயே உட்கார்ந்துவிட்டார்! கடைசியில் அந்த ஊர் வாத்தியார் ஒருவருக்கு இவருடைய இடத்தைக் கொடுப்பதற்காக இவரை மிண்டி போட்டுத்தான் கிளப்பவேண்டியிருந்தது!

ஏன் தெரியுமா?

அந்தச் சுவையான வரலாற்றை அடுத்த வாரம் பார்ப்போம்!

சாந்த பவான்
(சுத்த சைவ உணவு விடுதி)
● சகல வசதிகளுடன் தங்குவதற்கு அறைகள்
● அறுசுவை மிக்க சுத்த போசனம்
● விருந்துபசாரங்களுக்குப் போதிய இடம்
● விசேஷ ஆடர்கள் குறுகியகாலத்தில் கவனிப்பு
எல்லாம் ஒருங்கே அமையப்பெற்ற இடம்
சாந்த பவான்
121, மலேவீதி — கொழும்பு 2.

நீதிபதிக்கு முன்னால்!

# 'அவள் வாயாடி! அதனால் ஆசை நாயகியிடம் போனேன்'

"நாங்கள் அவருடன் சென்று வசிக்க விரும்பவில்லை ஐயா" என்று பதிலளித்தாள் கோமதியம்மாள்!

'ஏன்?' என்று கேட்டார் மாஜிஸ்திரேட்.

"அவர் என்னை அடித்துத் துன்புறுத்துகின்றார் ஐயா"

"காரணம் என்ன?"

கோமதியம்மாளின் மாம்பளக் கன்னங்கள் மேலும் சிவந்தன. தலையைக் குனிந்து கொண்டாள். பெருவிரல் சிமேந்துத் தரையில் கோலம் கீறியது. நிலத்தில் ஓடும் கறுப்பெறும்பைக் கண்கள் கவனித்தன.

"வெட்கப்படுவதை வீட்டில் வைத்துக்கொள்ளலாம். காரணத்தை இங்கே கூறவேண்டும்"

"அவர் வேறொரு பெண்ணை வைத்திருக்கிறார் ஐயா!"

மாஜிஸ்திரேட் கோபமாக எதிரியைப் பார்த்தார். "உண்மையா?" என்றார்.

"ஆம் ஐயா!" என்றார் அவர்.

"ஏன், ஒரு பெண் உனக்குப் போதாதா?"

"அவளுடன் வசிக்க முடியவில்லை ஐயா!"

"ஏன்?"

"பொல்லாத வாய்க்காரி ஐயா! எதற்கெடுத்தாலும் சண்டைக்கு வந்துவிடுகிறாள்!"

"அதற்கு மாற்று வேறொரு பெண்ணிடம் செல்வதுதானா?"

மௌனமாக நின்றார் எதிரி கறுப்பையா.

"ஒரு பெண்ணை அடக்க முடியாத நீ என்ன ஆண்பிள்ளை! ஆசைநாயகியை விட்டுவிட்டு மனைவியுடன் போய் வசி"

"அவள் வாய்காட்டவில்லை என்றால் நான் போய் வசிக்கத் தயார்!" [சிரிப்பு]

"இனிமேல் வாய் காட்டாதே!"

"ஆம் ஐயா!" (சிரிப்பு)

'சரி போய் நன்றாக வாழுங்கள். ஒரு மாதத்தால் இக்கோட்டிற்கு மீண்டும் வந்து சந்தோஷமாக வசிப்பதாகச் சொல்லவேண்டும். தெரிந்ததா?"

இருவரும் ஒன்றாக "ஆம் ஐயா" என்றனர்.

'கரேல் செஸ்மன்' கதை 'ரமணன்'

## சிப்பாய்களை ஏமாற்றிவிட்டு

# நள்ளிரவில் கொள்ளையடிக்கிறான் செஸ்மன்!

## அவனைப் பிடிக்க அமெரிக்க அரசாங்கத்தின் புதிய தந்திரம்!

பென்ஜமின் ஜோன் ஸ்மித்தின் வீட்டில் கொள்ளையடிப்பதற்காக, கரேல் செஸ்மன் முன்னறிவித்தலோடு சென்றதும், நள்ளிரவில் ஜோன் ஸ்மித்தின் குடும்பத்தை நான்கு இராணுவவீரர்கள் சூழ்ந்து நின்று காவல் செய்துகொண்டிருந்த அதே நேரத்தில் 'டுமீல்' எனத் துப்பாக்கிக் குண்டு வெடித்த சத்தத்தைத் தொடர்ந்து இராணுவ வீரன் ஒருவன் துடிதுடித்துக் கீழே விழுந்த விஷயத்தையும் கடந்த வாரம் படித்தீர்கள். மேலும் என்ன நடந்தது? இதோ—

ஓர் இராணுவவீரன் அலறிக்கொண்டே நிலத்தில் விழுந்தவுடன் வெளியில் நின்ற பொலிஸ்காரர்களுக்கெல்லாம் ஒரே அதிர்ச்சியாகஇருந்தது. 'கரேல் செஸ்மன் எப்படியோ தம்மைஉருமாற்றிஉள்ளேநுழைந்து விட்டானே!' என்று அவர்கள் திகைத்தனர். ஆனால் உண்மையில் நடந்தது அதுவல்ல! அன்று பொலீஸ் படைகள் வருமுன்னரே செஸ்மன் பென்ஜமின் ஜோன் ஸ்மித்தின் வீட்டிற்குள் புகுந்து விட்டான். அதற்கு உதவியாக இருந்தது ஓர் அப்பாவி டிரைவரே! பென்ஜமின் ஜோன் ஸ்மித்தின் குடும்பத்தில் மிகவும் மதிப்புப்பெற்றிருந்த இந்த வயதான டிரைவர், அன்று மாலையும் வழக்கம்போல் தனது வானை எடுத்துக்கொண்டு பொருட்கள் வாங்குவதற்காகச் சென்றிருக்கிறான். அவன் திரும்பி வரும்பொழுது அவனது வானிற்கு முன்னால் யாரோ ஒரு கிழவர் விழுந்து கிடந்தாராம். நல்ல மனம் கொண்ட டிரைவர் வானை விட்டிறங்கி அந்தக் கிழவரிடம் சென்று விசாரித்திருக்கிறான். பாவம் அந்தக் கிழவனுக்கு எண்பது வயதாம். எங்கேயோசென்றவன் வீடு திரும்ப முடியாமல் நடு வழியிலேயே விழுந்துவிட்டான். டிரைவருக்கும் மனம் கேட்கவில்லை! டிரைவரும் ஓர் முதியவர்தானே?

அந்தக் கிழவனை ஏற்றிக்கொண்டு கிழவன் காட்டிய வழியாலேயே தனது வானை ஓட்டிக் கொண்டு சென்றான். வான் ஓர் தனிமையான இடத்தில் ஓடிக்கொண்டிருந்தது.

இருந்தாற்போல் அந்தக் கிழவர் வான் டிரைவர் மீது ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து கழுத்தை இறுக்கிப்பிடித்துக்கொண்டார். அப்படிப் பாய்ந்து பிடித்த கிழவர் வேறு யாருமல்ல—

சாட்சாத் கரேல்செஸ்மனே!

பாவம் அந்த உண்மையான கிழவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை!

அந்தக் கிழ டிரைவரின் பிரேதம் சில நாட்களுக்குப் பின்னர் எங்கேயோ ஓர் வயலில் கிடந்து கண்டு பிடிக்கப்பட்டதாம்.

செஸ்மன் நேராக வானைத் தனது தங்குமிடத்திற்கு ஓட்டியிருக்கிறான். அங்கு உடைமாற்றம் நடந்தேறியது.

செஸ்மனின் தங்குமிடம் எது தெரியுமா? எத்தனையோ வருடங்களாக மக்களால் பாவிக்கப்படாத, ஒருவரும் போகாத, பேய் வசிக்கிறதென்று கூறப்படும் ஓர் குகையே. இதனால் அவனது இடத்திற்கு யாரும் வருவதேயில்லை!

அன்றிரவு அவ் வீட்டைச் சூறையாடத் துணிந்திருந்த செஸ்மன் அவ்வீட்டின் பணிவுமிக்க பணியாளனாக வானை ஓட்டிக்கொண்டு சென்றான். கொள்ளை அடிப்பதற்குத்தேவையான அத்தனை ஆயுதங்களும் அவனது சட்டைப் பைக்குள் இருந்தன. ஏழு குண்டுகள் போடக் கூடிய சுழல் துப்பாக்கி யொன்றும் அவனிடம் இருந்தது.

அன்றைய தினம் 'வான்' வீடுதிரும்பும்பொழுது மாலை நான்கு மணியிருக்கும். வெளியிலே காவல் போடப்பட்டிருந்த இராணுவ வீரர்கள் அவனை அடையாளம்கண்டுகொள்ளவில்லை. ஏனெனில் அமெரிக்காவிலுள்ள பிரபுக்களின் வேலைக்காரர்களுக்கோர் தனியுடை கொடுக்கப்பட்டிருந்தது. அதன் நிறம் வெள்ளை! அந்த உடையை அணிந்தால் அநேகமாக எல்லோரும் ஒருமாதிரியாகவே தோன்றுவார்கள். நெருங்கிப் பழகியவர்களால் வித்தியாசம் கண்டு பிடிக்க முடியுமே தவிர மற்றவர்களால்இயலாது. புதிதாக வந்த வீரர்கள் அவனை எப்படி அடையாளம் காணமுடியும்?

ஆகவேதான்அவன் வீட்டிற்குளிருந்துகொண்டே மிகவும் சுலபமாக ஓர் சிப்பாயை சுட்டுவீழ்த்த முடிந்தது. எல்லாச் சிப்பாய்களும் சத்தம் கேட்ட இடத்தை நோக்கி ஓடினார்கள். பென்ஜமின் ஜோண்ஸ்மித்துக்கென்றால் உயிரே போய்விடும்போலிருந்தது! அவரது மனைவி அறிவு கெட்டே சாய்ந்துவிட்டாளாம்!

வீடு முழுவதும் ஒரேபரபரப்பு!!

இப்படிப்பட்ட 'நேரம்' தான் செஸ்மனுக்கு உதவி செய்வது வழக்கம். வீட்டிலுள்ள ஜன்னல்கள் யாவும் பூட்டும்படி இராணுவ லெப்டினன்ட் உத்தரவு கொடுத்தார். வீட்டிலுள்ள எல்லா வேலைக்காரர்களும் விழுந்தடித்துக்கொண்டு கட்டளையை நிறைவேற்றுவதற்காக ஓடினார்கள். செஸ்மனும்வேலைக்காரர்களுடன் வேலைக்காரனாகச் சேர்ந்து இரும்புப் பெட்டியுள்ள அறையை நோக்கி ஓடினான்.

ஆனால் இரும்புப்பெட்டிக்கு இருவர் காவலாக நிற்கின்றார்களே? அவர்களை எப்படியாவது அப்புறப்படுத்தவேண்டும். செஸ்மனின் மூளை துரிதமாக வேலைசெய்ய ஆரம்பித்தது. ஏதோ யுக்தியைக் கண்டு பிடித்துவிட்டது. செஸ்மனின் மூளை. "ஐயா! உங்களிருவரையும் வெளிக்கதவடியில் நிற்குமாறு லெப்டினன்ட் கூறுகிறார்!"

பாவம் அச்சிப்பாய்கள்! அவர்களும் அவன் சொன்னதை அப்படியே நம்பி ஒரே ஓட்டமாக ஓடினார்கள். அவர்களுக்கெங்கே தெரியும் இவன்தான் செஸ்மன் என்று? பிற்காலத்தில் அப்படி ஓடியதற்காக அந்தச் சிப்பாய்களுக்கு ஏதோ தண்டனையும் விதிக்கப்பட்டதாம்!

செஸ்மன் தனது வேலையை மிகவும் சுலபமாக முடித்துவிட்டான். இரும்புப் பெட்டியைத்திறப்பதற்கு அவனிடமிருந்த ஆயுதங்கள் உதவி செய்தன.

அன்று அங்கிருந்த சிப்பாய்கள் முதற்கொண்டு பென்ஜமின் ஜோண்ஸ்மித் வரை 'சி. சி' துப்பாக்கிப் பிரயோகத்துடனேயேஓடிவிட்டான் என எண்ணிக்கொண்டிருந்தார்கள். ஒருவருக்கும்தெரியாது செஸ்மன் சரியாகப் பன்னிரண்டு மணிக்கே தனது கொள்ளையை முடித்து விட்டான் என்று! அடுத்த நாள் காலை 5 மணிக்கு ஜோண் ஸ்மித் வீட்டு 'வான்' பால் பண்ணையை நோக்கி விரைந்தது. யார் அந்த வான் 'டிரைவர்' என்று வாசகர்களுக்குத் தெரியும். அது அந்தச் சிப்பாய்களுக்குத் தெரிந்திருக்குமா? அப்படித் தெரிந்தால் இன்று எமக்கு செஸ்மன் என்றொருவன் வாழ்ந்தான் என்று கூடத் தெரிந்திருக்காதே!

அன்று காலை 6 மணிக்கு பென்ஜமின் ஜோன்ஸ்மித் இரும்புப் பெட்டியைத் திறந்து பார்த்தாராம். அங்கு அவருக்காக நகைகள் காத்திருக்கவில்லை!! அதிர்ச்சிதான் காத்திருந்தது!!

செஸ்மன், தான் சொன்னபடியே இரண்டு லட்சம் டாலர்கள் பெறுமானம்

[6-ம் பக்கம் பார்க்க]

## சினிமாப் பட அதிபர்களென்று சொல்லி

# ஏமாற்றும் எத்தர் கூட்டம்!

"திருமதி பிள்ளை கதை வசனம் எழுதுகிறார், நாங்கள் சினிமாப் படம் எடுக்கிறோம்" என்று கூறிக்கொண்டு, இலங்கையைச்சுற்றி வலம் வந்த சில போலிப் படத்தயாரிப்பாளர்களின் திருகுதாளத்தைப் பற்றியும், படத்தில் நடிக்க வேண்டுமென்ற ஆசையில். பல் இளிக்கும் இவர்களிடம் வசமாக மாட்டிக்கொண்டு தத்தளிக்கும் கட்டிளம் குமரிகளைப்பற்றியும்; நடித்துக் கூலிபெறுவதற்குப் பதிலாக, படத்தில் நடிப்பதற்காகப் போலிப் படத் தயாரிப்பாளர்களிடம் பணத்தைப் பறிகொடுக்கும் பல இளைஞர்களைப் பற்றியும், முன் பொருமுறை'புதினம்' அம்பலப்பலப்படுத்தியது வாசகர்கள் அறிந்ததே.

இத்தகைய போலிப்படத் தயாரிப்பு நிலையங்கள், இலங்கையின் தலைநகரான கொழும்பில், மழைக்கு முளைத்த காளான்களைப் போல் நாளுக்கு நாள் தோன்றிக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இவர்களின் பிடியில் சிக்கித் தவிக்காமல், கொஞ்சம் விழிப்போடு இருக்குமாறு இளைஞர்களையும், வாலைப்பெண்களையும் மீண்டும் எச்சரிக்கின்றோம்!

இலங்கையைப் போலவே இந்தியாவிலும் பலகாலமாக இந்தப் போலிப் படத் தயாரிப்பாளர்கள் பொதுமக்களை ஏமாற்றிப் பணம் சம்பாதித்து வந்திருக்கிறார்கள். இவர்களில் ஒருவர், சமீபத்தில் சென்னை பொலிசாரின் பிடியில் வசமாகச்சிக்கியிருக்கிறார்.

மதுரையைச் சேர்ந்த ஆர். பி. ஆனந்தன் என்பவர், சினிமாவில் சேர்த்து விடுவதாகக் கூறி மூன்று ராஜ்யங்களைச் சேர்ந்த சுமார் 200 பேர்களை ஏமாற்றி, ஏழாயிரம் ரூபாய் வரை பணம் பறித்ததாகச் சொல்லப்படுகிறது. சென்னை கோடம்பாக்கத்தில் வசித்து வந்த ஆனந்தன், 'ஜீவன் பிலிம்ஸ்' என்ற பெயரில் ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தி சினிமாவில் சேர விரும்பும் நபர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியதாகவும், இவர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் ரூபா 31 வீதம் வசூலித்ததாகவும், சென்னை, ஆந்திரா, மைசூர் ஆகிய ராஜ்யங்களிலுள்ள பலரைக் கடந்த 1960-ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் ஏமாற்றி வந்ததாகவும் தெரிகிறது. இந்த நபரைப் பற்றிப் புகார்செய்து சென்னை பொலிஸ் நிலையங்களுக்குப் பல அநாமதேயக் கடிதங்கள் வந்து குவிந்தனவாம். அதைத் தொடர்ந்தே சென்னை நகர பொலிசார், ஆனந்தனை கைது செய்திருக்கின்றனர்.

# "என் மகளோடு உனக்கென்னடி பேச்சு?"

— சரோஜாதேவியின் தாயார்

# "என்னோடு உனக்குப் பேச்சில்லை, போ!"

— சாவித்திரி

கடந்த மாதம் சென்னையில் நடைபெற்ற சர்வதேச திரைப்படவிழாவையொட்டி, திரு. நாகி ரெட்டி, விஜயா கார்டனில் நடத்திய விருந்துபசாரத்தின் போது ஒரு பரபரப்பான சம்பவம் நடைபெற்றது!

சில மாதங்களுக்கு முன் வாஹினி ஸ்டுடியோவில் பிடிக்கப்பட்ட ஒரு படத்தில், சரோஜாதேவியுடன் ஜெமினி கணேசன் ஜோடியாக நடிப்பதை, சாவித்திரி ஆட்சேபித்தார்; அதைத்தொடர்ந்து சாவித்திரிக்கும் சரோஜாதேவிக்கும் இடையில் ஏற்பட்ட வாய்ச்சண்டைக்குப் பின்னர், இருவரும் பேசிக்கொள்வதை அடியோடு நிறுத்திக்கொண்டார்கள். இந்த நிலையை நீடிக்கவிடக் கூடாது என எண்ணிய திரு. ஏ. எல். சீனிவாசன் போன்ற பட உலகப் பிரமுகர்கள் சிலர், இருவரையும் சமாதானம் செய்து வைக்க முயன்றனர்.

முதலில் சாவித்திரிடம் சென்று, "சரோஜாதேவியுடன் நீங்கள் கொண்டுள்ள பகைமை உணர்ச்சியை உங்கள் மனதிலிருந்து நீக்கிவிடுங்கள்" என்று வேண்டிக்கொண்டனர். அதற்கு சாவித்திரி, "எந்த விதமான பகைமை உணர்ச்சியும் என் மனதில் இல்லை. நான் சரோஜாதேவியுடன் பேசுவதற்கு எப்பொழுதும் தயாராக இருக்கிறேன். சரோஜாதேவி என் 'சிஸ்டர்' மாதிரி" என்றார். அதைத் தொடர்ந்து சரோஜாதேவியும், சாவித்திரியும் கலகலப்பாகப் பேசிக்கொண்டார்கள். இருவரும் சேர்ந்து புகைப்படம்கூட எடுத்துக்கொண்டார்கள்!

அத்தோடு நின்றுவிட விரும்பாத 'சமாதானத் தூதுவர்கள்' சாவித்திரியிடம், "சரோஜாதேவியுடன் நீங்கள் பேசிக்கொண்டால் மாத்திரம் போதாது. அவரது தாயாரையும் நீங்கள் சந்தித்துப் பேச வேண்டும்" எனக்கேட்டுக்கொண்டனர். சாவித்திரியும் அதற்குச் சம்மதித்தார். பின்னர், சரோஜாதேவியின் தாயாரிடம் சென்ற அவர்கள், அவரிடம் விஷயத்தைக் கூறாமல் அவரை சாவித்திரியிடம் அழைத்துவந்தனர். அவர் வரும் வழியிலேயே சரோஜாதேவியுடன் சாவித்திரி சிரித்துச் சிரித்துச் பேசிக் கொண்டிருப்பதைக் கவனித்துவிட்டார். அவருக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. சாவித்திரியை நோக்கி, "என் மகளுடன் உனக்கென்னடி பேச்சு?" என்று ஆரம்பித்த அவர், சாவித்திரியைச் சரமாரியாகத் திட்டித் தீர்த்து விட்டார்.

சாவித்திரியும் விட்டுக்கொடுக்கவில்லை. "நானாக வலியப் பேசவில்லை. அப்படிப் பேசவும் நான் நினைக்கவில்லை. ஏதோ பெரியவர்கள் சொல்கிறார்களே என்பதற்காகத்தான் பேசினேன். என்னோடு பேசுவதற்கு உனக்கு என்ன யோக்கியதை இருக்கிறது? என்னோடு உனக்குப் பேச்சில்லை, போ!" என்று படபடவென்று பொரிந்து தள்ளிவிட்டார் சாவித்திரி.

இந்த எக்கச் சக்கமான நிலைமையைச் சமாளிக்க முடியாமல், மத்தியஸ்தம் செய்ய வந்தவர்கள் திக்குமுக்காடித் திணறிப்போய் விட்டார்கள். இந்தத் தகராறு முற்றிவிடக் கூடும் என்று எண்ணிய ஜெமினி கணேசன் ஓடியேவந்து சாவித்திரியை அங்கிருந்து கூட்டிக்கொண்டு போனபிறகுதான் பரபரப்பு ஓரளவு அடங்கியது! ●

## 'வேங்கையின் மைந்தன்'

பிரபல நாவலாசிரியரான 'அகிலன்' இப்பொழுது திரைப்படக்கதாசிரியராக மாறியிருப்பது வாசகர்கள் அறிந்ததே. 'கல்கி' பத்திரிகையில் அவர் தொடராக எழுதி வந்த 'பாவைவிளக்கு' திரைப் படமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து, அகிலனின் மற்றொரு தொடர்கதையான 'வேங்கையின் மைந்தன்' என்ற கதையும் திரைப்படமாக தயாரிக்கப் படவிருக்கின்றது.

'கப்பலோட்டிய தமிழ'னைத் தயாரித்துள்ள பத்மினி பிக்சர்ஸார், அடுத்ததாக "வேங்கையின் மைந்த"னைத்தயாரிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகின்றனர். அகிலனே இக்கதைக்கு வசனம் எழுதப் போகிறாராம். இப்படத்தை, பி. ஆர். பந்துலு டைரக்ட் செய்யவிருக்கிறார்,

## இலங்கையில் வேட்டைக்காரன்?

தற்போது 'தாய்சொல்லைத் தட்டாதே' என்ற படத்தைத் தயாரித்து வெளியிட்டுள்ள தேவர் பிலிம்ஸார், அடுத்த படியாக, 'வேட்டைக்காரன்' என்ற பெயரில் ஒரு புதிய படத்தை தயாரிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

எம். ஜி. ராமச்சந்திரன் எம். ஆர். ராதா, சரோஜாதேவி ஆகிய பிரபல நடிகர்கள் பங்கு பற்றி நடிக்கவிருக்கும் இந்தப் படம் பெரும்பாலும் இலங்கையிலேயே படமாக்கப்படவிருக்கிறதாம்!

## உப நடிகரின் தினக்கூலி

## ரூபா 160!

ஹாலிவுட்டில் திரைப் படங்களில் நடிக்கும் உப நடிக—நடிகைகளுக்குக் கிடைக்கும் சம்பளம் எவ்வளவு தெரியுமா? 160 ரூபா! ஆச்சரியப்பட்டு விடாதீர்கள். காரணம், இங்குள்ள வேலை தேடித்தரும் ஸ்தாபனத்தில் 3614 பேர் தங்களது பெயர்களைப் பதிந்து வைத்திருக்கின்றனர். ஆனால், அங்கே ஒரு நாளைக்கு 400 பேர்களுக்கு மேல் வேலை கிடைப்பதில்லையாம்!



பாரத நாட்டின் பழம் பெரும் நடனக் கலைகளில் ஒன்று 'கதக்களி' நடனம். தென்இந்தியாவில் கேரள நாட்டுக்கே உரித்தானது தான் இந்த நாட்டியநாடகம். இந்த நடனத்தில்ஒரு சில நடிகர்களும், இசை வல்லுனர் நால்வரும் பங்குபற்றுவார்கள். ஒப்பனையும், உடைகளுமே அதன் சிறப்பு அம்சங்களாகும்.

இந்தியப்புராணங்களில் சொல்லப்பட்டுள்ள பூதகணங்களையும், தெய்வங்களையும், மன்னர்களையும், வீரர்களையும், அரக்கிகளையும் கதக்களி நடனத்தில் கண் முன்னால் காணமுடிகிறது! எனவே இந்தக் கேரள நாட்டியம், காண்போர் மனதைக்கொள்ளை கொள்வதில் வியப்பில்லையல்லவா?

உதயசங்கர், ருக்மணி தேவி, சாந்தாராவ் முதலிய புகழ்பெற்ற இந்திய நடனக்கலைஞர்கள் இந்தக் கதக்களி நடனத்தில் சிறந்து விளங்குகின்றனர். இந்த நடனத்தில் கண்களுக்கு நிறைய வேலையுண்டு.

இந்த நடனத்தில் 'மோகினிஆட்டம்" என்று ஒன்று இருக்கிறது. பெண்கள் தனியாக ஆடுவது தான் இந்த மோகினி ஆட்டம். இந்த ஆட்டத்தில் தோட்டச்சேரிசின்னம்மு அம்மா என்பவர் இன்று பிரபலமுடன் திகழ்கிறார். முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் கேரளத்தின் கவிஅரசர் வெள்ளத்தோல்நாராயண மேனனால் நிறுவப்பெற்ற நாட்டியப்பள்ளி இன்று கதக்களி நடனக் கலைஞர்களுக்குப் பெருஞ் சேவை செய்து வருகின்றது!

"தேசங்கள் தோறும் பாஷைகள் வேறு" என்பது போல், ஒவ்வொரு தேசத்தின் சூழ்நிலைக்கும், கலைத்திறனுக்கும்ஏற்பவே அவர்களின் ஆடற்கலையும் இருந்து வருகிறது.

பாரத நாட்டில், தமிழகத்தின் பரதநாட்டியமும் கேரளத்தின் கதக்களி நடனமும் மட்டும் மிகச்சிறந்து விளங்குவதற்குக் காரணம், அவற்றின் அபிநயச் சிறப்பும், சாஸ்திரோக்தமான முத்திரைகளும், கர்நாடக சங்கீத அஸ்திவாரமுமே ஆகும். ●

# இத்தால்...

# சகலரும் அறிவது!

### பதியுதீனுக்குப் பிறந்தநாள்?

கடந்த வாரம் புதினத்தில், பக்கத்துக்குப் பக்கம் பதியு தீன்மஹ்மூதைப் பற்றியும்; கல்வி இலாகாவைப் பற்றியும் கதைகதையாக எழுதி, கல்வி அமைச்சருக்கு ஒரு தனி 'மலரே' போட்டு விட்டீர்களே!.. பதியுதீனுக்குப் பிறந்த நாளா என்ன?

கொழும்பு—13. — கே. ஆர். வேலாயுதம்.

### வசந்தியின் மணாளன் யாரோ?

26-11-61 'புதினம்' இதழில் "வாலிபர்களே, குணமுள்ள பெண்களை மணந்துகொள்ளுங்கள்" என்று புதுமுகம் 'தேன் நிலவு' வசந்தி இளைஞர்களுக்கு அறிவுரை கூறியிருப்பதைப் படித்தேன். பெரிய பாட்டியம்மாளைப்போல் எங்களுக்குப் புத்திமதிசொல்லும் இந்தக் குட்டிநடிகை, எப்படிப்பட்ட வாலிபனை மணக்கப் போகிறாராம்?

கண்டி, —என். எஸ். ராஜா

### ஐயமில்லை!

புதினத்தில் தற்போது பக்கங்கள் குறைவாக இருப்பதை நான் ஆட்சேபிக்கின்றேன்! என்றாலும் என்ன செய்வது? காகிதம் விற்கும் விலையில்......

பத்திரிகையில் விவாதக் கட்டுரைகளோ, போட்டி நிகழ்ச்சிகளோ ஆரம்பிப்பதுடன், சிறு கதைகளையும் பிரசுரித்தால் 'புதினம்' என்றும் சுவை மிக்கதாக விளங்கும் என்பதில் ஐயமில்லை!

திருகோணமலை, — பத்மாசனி ஏரம்பு.

### மாலாவுக்குப் பாராட்டு!

கடந்தவாரம் புதினத்தின் முகப்பை அலங்கரித்த கருத்துப் படம் (கார்ட்டூன்) பலே ஜோர். தமிழ்க்காங்கிரஸ் கட்சியினரால் நடாத்தப்படும் 'தமிழன்' என்ற பத்திரிகை, தமிழரசுத் தந்தையைத் திட்டிப் பக்கம் பக்கமாக எழுதியிருந்த விஷயத்தை, சில கோடுகளைக் கொண்டு தெள்ளத் தெளிவாக விளக்கிய ஓவியர் மாலாவுக்கு என் பாராட்டுதல்கள்!

யாழ்ப்பாணம், —என். கதிர்காமத்தம்பி.

### இதற்கா வீடு?

ஒரு காலத்தில் அடர்ந்த காடாகக் கிடந்த கன்னியாவிலக்கு என்னும் பகுதியை, அரசாங்கம் குடியேற்றப் பகுதியாக்கி, குடியிருப்புக்கெனத் தலைக்கு அரை ஏக்கர் நிலமும் வழங்கி வருகிறது. இப்பகுதியில் குடியேறுபவர்களில், விலை மாதர்களும் பலர் இருக்கிறார்கள்! பிரஸ்தாப இல்லப் பகுதிகளில் இந்த இரவு ராணிகளின் அட்டகாசம் தாங்க முடியவில்லை. அரசாங்கம் இவர்களுக்கு வீடு கொடுத்துக் குடியேற்றியது இதற்காகவா?

கிண்ணியா, 'எல்லெஸ்'

### கல்விமந்திரி கவனிக்க!

கடந்த வாரம் புதினத்தில் 'கனம் கல்வி மந்திரி புராணம், என்ற விஷயம்தான் என்னை மிகவும் கவர்ந்தது. அந்த விஷயத்தை கனம் கல்வி மந்திரி அவர்கள் படித்துப் பார்த்தால் அவர் முகம் எப்படி மாறும் என்பதை என் மனதுக்குள் நினைத்துப் பார்த்த எனக்கு அடக்க முடியாமல் சிரிப்பு வந்துவிட்டது! 'முஸ்லிம்கள் எல்லோரும் ஒரே மாதிரியானவர்களா' ஸாகிரா கல்லூரி ஆசிரியராக இருந்து, பிறகு அரசியலில் புகுந்து மந்திரியானபின், 'தான் வந்த வழியையே அடைக்கும்' கனம் கல்விமந்திரியும் ஒரு முஸ்லிம்தான். அதே நேரத்தில் அரசாங்கம் பாடசாலைகளைக் கைப்பற்றுவதை விரும்பாமல், கொழும்பு நகரச்சபை அங்கத்தவர் பதவியிலிருந்து விலகி, தாம் அதிபராகக் கடமையாற்றும் அதே பாடசாலையில் தொடர்ந்து பணிபுரிய முடிவு செய்துள்ள திருமதி அய்ஷாராவுப் அவர்களும் கூட ஒரு முஸ்லிம்தானே?

வெள்ளவத்தை, — செல்வி. ஜெலிமா தாஹிர்

## உங்கள் காலபலன்

### இந்த வாரம் எப்படி?

"ரவி" சோதிடர்

3-12-61 முதல் 9-12-61 வரை

**மேடம்:** உங்கள் கருமங்களில் சில முன்னேற்றங்கள் உண்டு. நண்பர்கள் மூலமாகப் பல வித உதவி கிட்டும். கீர்த்தியும் சத்துரு ஜயமும் உண்டு. புதன் பிற்பகல், வியாழன் வெள்ளி வாரங்களை அவதானமாகச் செலவிடவும்.

**இடபம்:** தேகசுகம் தொடர்ந்து பாதிக்கப்படும். தொழில் ஸ்தானத்திலும் சில சங்கடங்கள் ஏற்படும். பிரயாசம் அதிகமாக இருக்கும். மாதுரு வழிபந்துக்களால் கஷ்டம் உண்டு. வெள்ளி பிற்பகல் சனி வாரங்களை அவதானமாகச் செலவிடவும்.

**மிதுனம்:** தொழிலைப் பொறுத்தவரையில் தொடர்ந்து இந்தவாரம் நன்றாக அமையும். சத்துரு ஜயமும், உறவினர் சகாயமும் உண்டு. ஆனால் மனதில் அமைதியிராது. வேலைகளும் அதிகமாக இருக்கும்.

**கடகம்:** குடும்பத்தில் சச்சரவுகள் காணப்படுகின்றன. தேகசுகவீனமும் உண்டு. வயிற்றில் ரோகங்கள் ஏற்படலாம். இடையறாத யோசனையும் புதிய தொழில்களில் தாமதமும் காணப்படுகின்றன.

**சிங்கம்:** இனசனங்களுடன் விரோதமுண்டு. வாகனங்களாற் சங்கடங்களும் செலவுகளும் உண்டாகும். நண்பர்களால் உதவி உண்டு. எதிர்ப்புகளைச் சமாளித்து முன்னேற முடியும்.

**கன்னி:** தொடர்ந்து இவ்வாரமும் நற்பலனைக் கொடுக்கும். உங்கள் திட்டப்படி முன்னேற முடியும். இளைய சகோதரரால் நன்மைகள் பல ஏற்படும். கீர்த்தியும் சத்துரு ஜயமும் உண்டு.

**துலாம்:** பொருள் விருத்தியுண்டு. புதிய விஷயங்களில் தாமதமேற்பட்டாலும் வெற்றி நிச்சயம். அன்னியர் மூலமாகப் பல வித உதவி கிட்டும். மேலதிகாரிகளால் நன்மையுண்டு.

**விருச்சிகம்:** மனதில் பலவித சஞ்சலங்கள் ஏற்படும். ஆனால் தொழில் விஷயங்களில் முன்னேற்றமுண்டு. பூமியாலும் லாபம் கிட்டும், செலவினங்களும் அதிகமாகும்.

**தனுசு:** பொருள் விருத்தியுண்டு. விவசாயத்தொழிலிலும் முன்னேற்றமுண்டு. ஆனால் மனதில் அமைதி நிலவாது. தொழில் ஸ்தாபனங்களிலும் சிறு எதிர்ப்புகள் ஏற்படும்.

**மகரம்:** அதிக எதிர்ப்புகள் ஏற்பட்டாலும் அவற்றைச் சமாளித்து முன்றேமுடியும். தொழிலில் போதிய லாபம் கிட்டும். நண்பர்களாலும் பலவித உதவிகளுண்டு.

**கும்பம்:** கருமங்களில் தடையின்றி முன்னேற்றமுண்டு. ஆனால் ஞாயிற்றுக்கிழமையையும் திங்கள் காலையையும் அவதானமாகச் செலவிடவும், மிகுதி நாட்கள் தொடர்ந்து நன்மைபயக்கும்.

**மீனம்:** வாரமுற்பகுதியில் சில சங்கடங்கள் ஏற்படும், திங்கள் பிற்பகல், செவ்வாய் புதன்கிழமைகளை அவதானமாகச் செலவிடவும். மிகுதி நாட்கள் நன்மைபயக்கக் கூடியன.

**சோதிடம்**

உங்கள் பெயர், பிறந்த ஊர், வருஷம், மாதம், திகதி, நேரம் முதலியவற்றுடன் ரூ. 5-00 போஸ்டல் ஓடர் அனுப்பினால் உங்கள் ஒரு வருட கால பலன் மிகச் சரியாக எழுதி அனுப்பப்படும். இந்த விளம்பரத் துண்டைவைத்து அனுப்பும் 'புதினம்' வாசகர்கள் மட்டும் ரூபா 3-00 அனுப்பினால் போதுமானது.

'ரவி' சோதிடர்,
226, காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம்.




## 'கரேல் செஸ்மன்'

[4-ம் பக்கத்தொடர்ச்சி]

உள்ளபணத்தைக் கிழப்பிக்கொண்டு சென்றுவிட்டான். இரும்புப்பெட்டிக்குக் காவல் போடப்பட்ட வீரர்கள் என்ன ஆனார்கள். என்று விசாரித்தபொழுதே நடந்தவை யாவும் நன்றாக விளங்கியது. அதற்கிடையில் ஒரு வேலைக்காரன் அன்று முழுவதும் வான் டிரைவர் 'கராஜ்' ஜைவிட்டு வெளியே வரவில்லை என்றும்கூறினானும்.

இந்தச் சம்பவத்தைப் பற்றி அமெரிக்கப் பத்திரிகைகள் யாவும் எழுதும் பொழுது பொலீஸ் படையினரையும் இராணுவத்தினரையும் மிகவும் கிண்டல் பண்ணி எழுதியிருந்தன!

* *

இரண்டு மாதங்கள் எப்படியோ மறைந்துவிட்டன.

பென்ஜமின் ஜோண்ஸ்மித்தின் வான் எங்கேயோ ஓர் தனிமையான இடத்தில் எரிந்துபோய் சாம்பலாகிக் கிடந்தது. அங்கிருந்த தடத்தைக் கொண்டு அமெரிக்க பொலீஸ்படையினர் மிகவுந் துரிதமாக செஸ்மனைத்தேடினார்கள். எத்தனையோ இரகசியப் பொலீஸார்கள் இதற்கென நியமிக்கப்பட்டார்கள்.

அமெரிக்க பொலீஸ் படையினரின் முயற்சியும் வீண்போகவில்லை! இரகசியப் பொலீஸ்படையைச் சேர்ந்த ஒருவர் செஸ்மன் வாழும் குகையைக் கண்டு பிடித்துவிட்டார்.

அன்று காலை எட்டு மணியிருக்கும்.

அமெரிக்க பொலீஸ் கமிஷனரின் மேசையிலிருந்த டெலிபோன் மணி கிணுகிணுத்தது.

அவருக்கும் செஸ்மனின் இருப்பிடம் கண்டு பிடிக்கப்பட்டு விட்டதாக அறிவித்தார்கள், அமெரிக்காவிலுள்ள எல்லா பொலிஸ் நிலயங்களின் டெலிபோன்களும் கிணுகிணுத்தன.

பச்சைநிற 'வெக்சோல்' கார்கள் யாவற்றையும் கண்ட கண்ட இடத்தில் நிற்பாட்டும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஏனெனில் செஸ்மனது காரும், பச்சை நிற வெக்சோலே!

காலை பத்து மணியளவில் எத்தனையோ ஆயுதம் தாங்கிய பொலிஸார்களும்' மற்றும் இராணுவ வீரர்களும் செஸ்மன் வசிக்கும் குகையை நோக்கி விரைந்தார்கள்! படையும் குகையை நெருங்கி விட்டது!

பச்சை நிற வெக்சோல்கார் வெளியில் நின்று கொண்டிருந்தது.

அதே நேரத்தில்—செஸ்மன் குகைக்குள்ளே இருக்கின்றான்! (தொடரும்)

# நோயாளிகளின் மனதுக்கு இதமளிக்கும் வண்ணமலர்!

வர்ணங்களுக்கும் மனித வாழ்க்கைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பது நம்மில் பலருக்குத் தெரியாது. நீல வானையும் இளம் வெயிலையும் காணும்போது உற்சாகமடைகிறோம். காலை நேரத்தில் சாம்பல் பூத்த வானம் இருந்தால் சோர்வும் சோம்பலும்தான் ஏற்படுகிறது. நிறங்களால் உள்ளத்திலும், உடலிலும் மாறுதல் ஏற்படுவதாக வைத்திய நிபுணர்கள்கூறுகிறார்கள்.

நோயாளிகள்தான் நிறங்களின் கவர்ச்சிக்கு எளிதில் அடிமைப்பட்டு விடுகிறார்களாம்! சிவப்பு வர்ணம் பூசப்பட்ட அறையில், இரத்தக் கொதிப்புள்ள நோயாளிகளை அழைத்துச் சென்றால், இரத்த அழுத்தம் அதிகரிக்குமாம்! ''உளநோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்களும், நோயின் வேகம்

## நிறங்களுக்குள்ள அதிசய சக்திகள்!

தாளாது அடிக்கடி பிதற்றிக்கொண்டிருப்பவர்களும், சிவப்பு நிறச் சுவர்களுள்ள அறையினுள் புகுந்துவிட்டால் அமைதியை இழந்து, அருகிலிருப்பவர்களைத் தாக்கவும் கூடும்'' என்று பிரிட்டிஷ் கலர் கவுன்ஸிலைச் சேர்ந்த நிபுணர்கள் கூறுகிறார்கள்.

நீலநிறம் மனதிற்கு இதமானது; கண்ணுக்குக் குளிர்ச்சி ஊட்டுகிறது என்று பல நிபுணர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். இளம் பச்சை நிறத்தால் நோயாளிகளுக்கு உற்சாகம் ஏற்படுகிறது. மஞ்சள் நிறம் உள்ளத்தில் அமைதி நிலவ ஏதுவாக அமைகின்றது. நோயாளிகளுக்கு நிறங்களினால் நன்மை கிடைக்கின்றது என்றாலும், வர்ணச் சேர்க்கையுள்ள அமைப்புச் சித்திரங்களால் நன்மை இல்லை. கோடு, வட்டம் போன்ற அமைப்புச் சித்திரங்கள் நோயாளிகளுக்கு எரிச்சல் ஊட்டக் கூடியவை. நோயுற்ற குழந்தைகள் அவற்றைக்கண்டு பயப்படுவதுமுண்டு. சித்திரங்களை விடத் தெளிவான ஒற்றை நிறங்களே நன்மை தரக் கூடியவை.

நோயாளிகளுக்குச் சிறிது முன் யோசனையுடன் படுக்கை விரிப்புகளையும் தலையணை உறைகளையும் கொடுத்தால், நோயின் வேகத்தைக் குறைத்து விட முடியும். கவர்ச்சிகரமான விரிப்புகளை விரிப்பதுடன் நேயாளியின் பார்வை படும் இடங்களில் அழகான படங்களை மாட்டிவைத்தால், நோயாளிக்குச் சோர்வு தட்டாது. அழகான படங்கள்—குறிப்பாக வர்ணப்படங்கள் சேகரிக்கக் காசு செலவழிக்க வேண்டிய அவசியமில்லை. பத்திரிகைகளில் வரும் படங்களைக் கத்தரித்து, வகைப்படுத்தி அட்டைகளில் ஒட்டலாம். ஒரு நாளைக்கு இயற்கைக் காட்சிகள், மறுநாள் பிராணிகள், மூன்றாம் நாள் மலர்கள், அதற்கடுத்த நாள் பறவைகள் என்று படங்களை மாற்றி மாற்றி வைக்கலாம்.

நோயாளிகளுக்குப் படுக்கையில் கிடப்பது அலுப்பாக இருக்கும்; பார்த்ததையே திரும்பத் திரும்பப் பார்த்துக் கொண்டிருப்பதிலும் எரிச்சல் மூளும். வீதியில் நடப்பவற்றைப் பிரதிபலிக்கும் முறையில், ஜன்னலுக்கு அருகில்—நோயாளிக்குத் தெரியும் விதத்தில் ஒரு முகம்பார்க்கும் கண்ணாடியை மாட்டிவைப்பதில் நல்ல பலன் கிடைக்கும். தெருவில் போவோர் வருவோரையும், தூரத்தில் உள்ள மரம் செடி கொடிகளையும் பார்ப்பதில் நோயாளிகளுக்கு மகிழ்ச்சி உண்டு!

நோயாளிகள் இருக்கும் அறையில் வர்ணமலர்களை வைப்பதும் நன்மை பயக்கும். மலர்களைத் தெரிவு செய்வதில் மிகவும் கவனம் செலுத்தவேண்டும்! நம் நாட்டில் மூட நம்பிக்கையுள்ளவர்களின் தொகை அதிகம். வயதானவர்களுக்கு நிமித்தங்களில் அபார நம்பிக்கையுண்டு. நோயாளிகளுக்கு அருகில் சிவப்பு மலர்களையும் வெள்ளை மலர்களையும் ஒன்றாகக் கட்டி வைத்தால் சாவு நேரிடும் என்ற நம்பிக்கை இருந்துவருகிறது. சிவப்பும் வெள்ளையுமாக மலர்ந்த மலர்களை வீட்டுக்குக் கொண்டு வருவதே துர் நிமித்தமாம்!

மலர்களைக் கொய்து வைப்பதை விட, மலர்ச் செடிகளை அறையில் வைப்பதால் நோயாளிகளுக்கு மகிழ்ச்சி அதிகரிக்கிறது. மொக்கும் மலரும் நிறைந்த செடியில் வண்ணச் சேர்க்கையுண்டு. மொக்குகள் மடல் அவிழ்வதைக் கவனித்துக் கொண்டிருப்பதில் நோயாளிகளுக்கு உற்சாகம் ஏற்படுகிறது.

நோயாளிகள் ஆகாரத்தில் விருப்பம் ஊட்ட நிறங்கள் பேருதவி புரிகின்றன, சாதாரணப் பாத்திரத்தில் கஞ்சி முதலிய உணவுகளைக் கொடுப்பதை விட, பூப்போட்ட பீங்கான் பாத்திரங்களில் கொடுத்தால் நோயாளிகள் விரும்பிச் சாப்பிடுவார்கள். உணவு வகையிலும் நிற வேறுபாட்டுக்கு முதலிடம் கொடுக்க வேண்டியது அவசியம். பச்சைப் பட்டாணியுடன் உருளைக் கிழங்கு, தக்காளி, பால் முதலிய பல நிற ஆகாரத்தைத் தட்டில் காணும் பொழுது, நோயாளிக்கு வாயில் நீர் ஊறும்.

பல நாட்களாகப் படுக்கையில் கிடப்பவர்களுக்கு நிறங்களின் உதவியால் களிப்பு ஊட்டுவது அவசியம். இவ்விஷயத்தில் திட்டமிட்டுச் செயலாற்றினால் வெற்றி பெறுவது திண்ணம். அடிக்கடி படுக்கை விரிப்புகளை மாற்ற வேண்டும். சுவர்களில் வண்ணக் கலவையுள்ள படங்களைத் தொங்கவிட வேண்டும். இவற்றையும் அடிக்கடி மாற்றுவதில் நன்மையுண்டு. இரவு நேரத்தில் ரோஜா நிறம், அல்லது இளஞ்சிவப்பு நிறமுள்ள மின்சார விளக்குகளைப் போடவேண்டும். நோயாளி பெண்ணாக இருந்தால், வயதைக் கருதாமல், வர்ணச் சேர்க்கையுள்ள போர்வைகளையும் படுக்கை உடுப்புகளையும், பெரிய அளவு உள்ள முகம் பார்க்கும் கண்ணாடியையும், அலங்காரப் பொருள்கள் அடங்கிய பெட்டியையும் கொடுப்பதில் சிறந்த பலனுண்டு எனப் பிரபல வைத்திய நிபுணர்கள் கருதுகின்றனர்!

# தந்தையின் கண்களை பிடுங்கிய மைந்தன்!

''சிங்கத்தின் குட்டியும் சின்னஞ்சிறு குட்டியாக இருக்கும் பொழுது இரத்த தாகம் கொள்வதில்லை; மிருக வெறி பிடித்து அலைவதில்லை. ஆனால் அதன் நகமும் பற்களும் பூரண வளர்ச்சி பெற்றவுடன் தன் இனத்தின் குணத்தை அதுவும் பெறுகிறது. துரோகி பிறக்கும்போதே துரோகியாகப் பிறப்பதில்லை'' என்று மேதை ஜோன்ஸன் கூறுகிறார். அதற்கு ஒரு உதாரணம் இதோ—

இந்தியாவில், மும் தாஜ் என்ற தன் மனைவியின் நினைவுச் சின்னமாக தாஜ்மஹாலைக் கட்டுவித்து உலகப் புகழை ஈட்டிக்கொண்டான் மன்னன் ஷாஜஹான். இன்றும் அவன் பெயர் நிலைத்து நிற்கிறது! அவன் வாழ்க்கையின் இறுதிக்கட்டத்தில் அவன் பட்ட கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல.

அதிகார வெறிக்குப் பலியான மொகலாய மன்னன் ஔரங்கசீப், தன் தந்தையைச் சிறையிலடைத்துவிட்டு, தன் சகோதரர்களை நயவஞ்சகமாகக் கொன்று விட்டுச் சிம்மாசனம் ஏறினான். சிறையில் வாடிய ஷாஜஹான் தன் அந்தியகால சரித்திரத்தை சிறையினுள் வாடியபடியே எழுதமுற்பட்டார். இதையறிந்த அவர் மைந்தன் ஔரங்க சீப் தாமதமின்றி அவர் கண்களைப் பிடுங்கிவிடுமாறு உத்தரவிட்டான்! எனவே, ஷாஜஹான் சிறை வாழ்வில் சிருஷ்டிக்கவிருந்த ஒரு மாபெரும் இலக்கியத்தைப் பிற்கால உலகப் பிரஜைகளாகிய நாம் இழந்து விட்டோம்!

# வருமான வரிக்கு 'டிமிக்கி' கொடுக்க ஒரு விசித்திர சங்கம்!

அமெரிக்காவில்மனிதர்களின் குணங்களை அறிந்து அவர்களின் குணாதிசயங்களுக்கு ஏற்றவிதத்தில் பற்பல விதமான சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

'ஓட் வால்யூம் கிளப்' என்ற பெயரில் ஒரு சங்கம் இருக்கிறது, இதிலுள்ள அங்கத்தவர்கள் யாவரும் பெரும் அறிஞர்கள். பெரும்பாலும் எழுத்தாளர்கள். இவர்களில் ஒரு அங்கத்தவர் ஏதாவது ஒரு புத்தகத்தைஎழுதஆரம்பித்து, தொண்ணூறு சதவிகிதம் எழுதி முடிந்ததும் அதை மற்றொருவரிடம் கொடுத்துவிடுவார். அவர் அதைப் பூர்த்தி செய்து முடிக்க வேண்டும்.

'ஸைட் போர்ட் கிளப்' என்று மற்றொரு சங்கம் இருக்கிறது. இந்தச்சங்கத்தில் அங்கம்வகிப்பவர்கள் தங்கள் தலைமயிரை மிக நீளமாக வளர்க்க வேண்டும். சிலகுறிப்பிட்ட தினங்களில் இவர்கள் ஒன்று சேர்ந்து தங்கள் நீளமான தலைமயிரை மற்றவர்களுடைய தலைமயிருடன் முடிந்து கொண்டு விளையாடுவார்கள். 'கேன்டில்ப்பார் கிளப்' என்றமற்றொரு சங்கத்தின் அங்கத்தவர்கள் தங்கள்மீசையைமூன்று அங்குல நீளத்திலிருந்து பதினான்கு அங்குலம் வரை வளர்த்திருக்க வேண்டும்'

'சிகார் கிளப்' என்ற சங்கத்தில் சேர்ந்தவர்கள் 'சிகரெட் குடிக்கமாட்டோம்' என்று பிரதிக்ஞை செய்யவேண்டும். கஞ்சத்தனத்தில் மிஞ்சியவர்களுக்குக்கூட இங்கு சங்கம் இருக்கின்றது. பணத்தைச் செட்டாகச்செலவு செய்யத் தெரிந்தவர்கள் மட்டுமே இதில் அங்கத்தவராகலாம். சோம்பேறிகளுக்கென ஏற்படுத்தப்பட்டுள்ள சங்கத்தில், அசல் 'அட்டச் சோம்பேறி'களே அங்கம் வகிக்கின்றனர்!

பேய், பசாசு முதலியவைகளில் நம்பிக்கை கொண்டுள்ளவர்களுக்கு ஒரு சங்கம் இருக்கிறது இதன் அங்கத்தவர்கள் புதிய பேய்க் கதைகளை ஆராய்ச்சி செய்வதிலும், பேய் இருப்பதாக நம்பப்படும் இடங்களை நேரில் சென்று பார்ப்பதிலுமாகத் தங்கள் ஓய்வு நேரத்தைச் செலவிடுகின்றனர்.


இவை மட்டுமா? மந்திரவாதிகள் சங்கம், கணவர்கள் சங்கம், 'விளையாட்டுக்காரர்'கள் சங்கம் ஆகிய சங்கங்களுடன் மற்றொரு விசித்திரமான சங்கமும் இருக்கிறது அது என்ன தெரியுமா? வருமான வரிக்கு 'டிமிக்கி' கொடுக்கும் சங்கம்தான் அது!

Registered a newspaper at the G. P. O.

# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

## சாவித்திரி-சரோஜாதேவி தகராறு!



கடந்த சில மாதங்களாக பிரபல தென்னிந்திய நடிகைகளான சாவித்திரிக்கும், சரோஜாதேவிக்குமிடையில் பேச்சுவார்த்தை இல்லாமலிருந்தது. அதைத் தீர்த்துவைக்கச் சில படஉலகப் பிரமுகர்கள் முயன்றனர். வெற்றியும் கண்டனர்! ஆனால் அந்த வெற்றி சில நிமிடங்கள் கூட நீடிக்கவில்லை. மீண்டும் 'லடாய்' ஆரம்பித்துவிட்டது. அதன் முழு விபரங்களையும் இவ்விதழின் ஐந்தாம் பக்கத்தில் காணலாம்!

# மட்டக்களப்பு மக்களுக்கு யாழ்ப்பாணத்தார் எஜமானர்களா?

மட்டக்களப்பின் பிரபல வழக்கறிஞர்களுள் ஒருவரும், தமிழரசுக் கட்சியின் பழங்கால அங்கத்தவரும், அகில இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உபதலைவரும், 'மட்டுநகர் தமிழரசுக்கட்சிக் கிளையின் தலைவருமான திரு வி. எஸ். பூபாலரத்தினம், அண்மையில் நடந்தேறிய தமிழரசுக்கட்சியின் செனட்டர் தெரிவு சம்பந்தமாக வெளியிட்ட துண்டுப் பிரசுரத்தில் பின்வரும் கருத்துக்கள் காணப்படுகின்றன. அதில்—

"யாழ்ப்பாண அரசியல் தலைவர்களுடன் மட்டக்களப்பு மக்களாகிய நாம் சகோதரர்களாகவும், நண்பர்களாகவும், அன்பர்களாகவும், பொது எதிரியை வீழ்த்துவதற்காக ஒன்று பட்டோமேயல்லாமல், சிங்கள எஜமானர்களை அகற்றி விட்டு அந்த இடத்தில் யாழ்ப்பாண எஜமானர்களை அமர்த்தி அவர்களுக்குப் பணிவிடை செய்வதற்காக அல்ல!

"மட்டக்களப்பு மக்கள் ஏமாந்த சோணகிரிகளுமல்லர்; எடுப்பார் கைப்பிள்ளைகளுமல்லர். அவர்களும் மனிதர்கள். அவர்களுக்கும் சிந்திக்கச் சக்தியுண்டு. அவர்களது சுய மரியாதைக்கும், சுய கௌரவத்திற்கும் பங்கம் ஏற்படும்போது அதை எதிர்த்துப் போராடும் துணிவும் அவர்களுக்கு உண்டு. இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் கூட்டுமொத்தமான பொது உரிமைகளுக்காக ஏனைய பகுதித் தமிழ்மக்களோடு தோளோடு தோள் நின்று போராடும் அதே நேரத்தில் தங்களுக்குள்ள தனி உரிமைகளை இழக்க மட்டக்களப்பு மக்கள் ஒருபோதும் ஆயத்தமாயில்லை!"

செனட்டர் தெரிவு சம்பந்தமாகத் தமது சொந்த அபிப்பிராயத்தைத் தெரிவித்த திரு பூபாலரத்தினம் "இந்த செனட்டர் தெரிவு மட்டக்களப்பு மக்களைப் பெருத்த அவமானத்திற்குள்ளாக்கிவிட்டது. யாழ்ப்பாணத் தமிழரசுத் தலைவர்களின் சர்வாதிகாரச் செயல் மூலம் கிழக்குமாகாண மக்களைப் பெரும் கேவலத்திற்குள்ளாக்கியுள்ளது, தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணத் தலைமைப் பீடம்" என்று கூறியுள்ளார்.

[இவருடைய இந்த அபிப்பிராயம் குறித்து தமிழரசுக்கட்சியின் முக்கிய பிரமுகர் ஒருவர் வெளியிட்டுள்ள கருத்தை அடுத்தவாரம் புதினத்தில் எதிர் பாருங்கள்]

G. C. E. இந்து சமய பாடம்

**சைவசமய பாடத்திரட்டு**

**(SAIVAISM)**

ஜி. சி. ஈ. பாடத் திட்டத்தில் சமயபாடத்துக்கெனக் குறிப்பிடப்பட்ட எல்லாப் பகுதிகளும் அடங்கிய ஒரே நூல்!

பாடல்களுக்குப் பதவுரை, பொழிப்புரை, விளக்கக் குறிப்புகள் சிறப்பாக அமைக்கப்பெற்றது

★ விசேட பயிற்சி வினாக்கள்

★ விடைகள்

★ அட்டவணைகள்

முதலிய சிறப்புக்கள் சேர்ந்தது.

தொகுத்தவர்கள்:

வித்துவான். பொன். முத்துக்குமாரன் பி. ஓ. எல்.

பண்டிதர் ச. பஞ்சாட்சர சர்மா

விலை ரூபா 3-50 (தபாற்செலவு வேறு)

விற்பனையாளர்:

**ஆனந்தா அச்சகம்—புத்தகசாலை,**

226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

**சேலம்**

S. V. R. கண்டர் R. I. M. P. அவர்கள் தயாரிக்கும்

**வீரிய விர்த்தி மாத்திரை**

மிதமிஞ்சிய உஷ்ணத்தினாலும், அமிதபோகத்தினாலும் தாது நீர்த்துப்போகுதல், சொர்ப்பன ஸ்கலிதம் (இந்திரிய ஸ்கலிதம்) தாதுக்குறைவு, நரம்புத் தளர்ச்சி, சக்தி குறைவு, இவைகளை நீக்கி, இந்திரியத்தை கெட்டிப் படுத்தி சர்வநாடி நரம்புகளும், வலுவைக் கொடுக்க வல்ல சிறந்த வீரிய மாத்திரை.

24 மாத்திரைப்புட்டி ரு. 7-00

**லேபனம் மெழுகு**

குறி சிறுத்துப் போகுதல், சுருங்கும் தன்மையடைதல். தளர்ச்சியடைதல், உறுதியின்மை ஆகியவைகளுக்கு மேற் பூசும் மெழுகு.

1 அவுன்ஸ் புட்டி ரூபா 5-00

தேவைக்கு எழுதவும்:

**கண்ணையா மெடிக்கல் ஸ்டோர்ஸ்**

*Prop:* S. M. R. M. S.

ராகலை பஜார், ஆள்க்கருணை.

(சிலோன்) (P. O.)

**றைக்கிளீன் செய்ய பட்டு உடைகளை எங்களிடம் ஒப்படையுங்கள்!**

* நாங்கள் புதிதாக வரவழைத்த சுப்பர் உதவியைக் கொண்டும், அமெரிக்காவிலிருந்து வரவழைத்த விலையுயர்ந்த திராவகங்களின் உதவியைக் கொண்டும் உங்கள் விருப்பத்திற்கேற்றமாதிரி ஒரு மணி நேரத்தில் நேர்த்தியான முறையில் றைகிளீன் செய்து தருவோம்.

* தூர இடங்களில் உள்ளவர்கள் பார்சல் மூலம் அனுப்பிவைத்தால், றைகிளீன் செய்து பார்சல் மூலமே அனுப்பி வைப்போம்.

* விரும்பிய கலரில் சாயம் போடுவதிலும் கேட்கும் நேரம் தவணைக்குக் கொடுப்பதிலும் வட இலங்கையில் மிகப்பெரிய ஸ்தாபனம்

**சூரியப்பிரகாஸ்**

**டையேர்ஸ் அன் றைகிளீனேர்ஸ்**

பெரிய கடை, (பஸ் நிலையமுன்பாக) யாழ்ப்பாணம்

போன்: 474 தந்தி: 'றைகிளீன்'

இப்பத்திரிகையை அச்சிடுவித்து வெளியிட்ட ஆசிரியர்: பொன்னுலை தி. ச. வரதராசன்.

அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். போன்: 348; தந்தி: 'அச்சகம்'